**O.S.No. 05/2016**

வா.சா.1 , திருமதி. பிச்சையம்மாள்
நாள் : 28.11.2023 நேரம் : 11.45 a.m

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1) இவ்வழக்கின் 1ம் வாதி எனது கணவர். தற்போது அவர் உயிருடன் இல்லை. தாவா சொத்து 1ம் வாதியான எனது கணவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால், எனது மாமனார் குப்புவுக்கு கிரைய பாத்தியம் பெற்று அதனடிப்படையில் எனது கணவருக்கு பாகம் கிடைத்தது. எனது கணவருடன் 2 ஆண்களும், 2 பெண்களும் உடன் பிறந்தவர்கள் ஆவார்கள்.

2) தாவா சொத்து எனது கணவருக்கு தான் பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. எனது மாமனார் தாவா சொத்தை 18.07.1967ம் தேதி கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 18.07.1967ம் தேதி கிரையம் பெற்ற நாள் முதல் இன்று வரை எனது மாமனார் பெயரிலோ, எனது கணவர் பெயரிலோ வருவாய் ஆணங்கள் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல.

3) எனது மாமனார் பெயரிலோ, எனது கணவர் பெயரிலோ எந்தவிதமான பட்டா உள்ளிட்ட வருவாய் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சொத்திற்கு கிழக்கே 1ம் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு அவருடைய சொத்து கிரைய பாத்தியமா, பூர்வீக பாத்தியமா என்பது எனக்கு தெரியாது.

4)தாவா சொத்தை எங்களது சொத்து என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக பிரதிவாதிகள் எந்தவிதமான இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரைய பத்திரத்தை தவிர அனுபவத்தை

காட்டக்கூடிய எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, நாங்கள் தான் விவசாயம் செய்து வருகிறோம்.

5) 2ம் பிரதிவாதி ராஜேஸ்வரிக்கு எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. திருத்தப்பட்ட பிராதில் எதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதியை சேர்த்தீர்கள் என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.2 பட்டாவில் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் 2ம் பிரதிவாதியான ராஜேஸ்வரி மற்றும் அவரது மகனிடம் 18.08.1986ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் இந்த பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, கிரையம் பெற்ற தேதி முதல் இன்று வரை பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல.

6) எவ்வளவு இடம் எனது மாமா கிரையம் வாங்கினார் என்று சொன்னால் 90 செண்டு. தாவா சொத்தை 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்து அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு 1954ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1968ம் ஆண்டு டிசம்பர் 31 வரை 15 ஆண்டுகளுக்கு எந்தவிதமான வில்லங்கமும் இல்லை என்று சான்று எடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7) நீதிமன்ற ஆணையரை நியமித்து தாவா சொத்தை அடையாளம் காட்டினீர்களா என்றால் இல்லை. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.10 P.M